உ

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–4 குருகுலம், மாம்பாக்கம்; நந்தன, ஆடி; 4—8—52. தளிர்–45

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## வழியெஞ்சா வாழ்வு

ஒரு சிலர், வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தம் தரத்தில் உயர்கின்றனர். குறுக்கு வழிகளிலும் பாவமிக்க செயல்களிலும் ஈடுபட்டுப் பொருள் திரட்டுகின்றனர். இச் செயல்களால் நேரும் பழிபாவங்களுக்கு அஞ்சுவதில்லை. எப்படியோ உயர்கின்றனர்; வாழ்கின்றனர். சடுதியில் நிலைமை கெட்டுப் பழைய நிலைமையும் அடைகின்றனர்.

நல்லாற்றால் பொருள் ஈட்டுதலும், அதனை அறநெறியில் தக்கார் பலர்க்கும் பகுத்துத் தாமும் உண்ணுதலும் அறிவு மிக்க இல்லறத்தார் கடைமையாகின்றது.

இந் நெறியில் வாழும் குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் களிநடம் புரிகின்றன. வீணாரவார வெறுஞ் செயல்கள் அறவே ஒழிகின்றன. அவ் விடங்களில் அறிவுப் பிழம்புகளான நன் மக்கள் பலர் தோன்றிக் குடும்ப மகிழ்ச்சியை மிகுவிப்படுத்துவர். வழிவழியாக இப் பண்புகளினின்றும் நீங்காத குடும்பங்களின் கால்வழி பல்கிப் பெருகுதல் தவிர 'அழிவு' என்பதனை ஒருபோதும் அறியா.

தவறான வழியிற் கிடைத்த பொருள் கொண்டு பகட்டுக்காக வாவது ஒரு சிலர் பகுத்துண்பதுண்டு; பொய்யான இவ்வொழுக்கத்தால் அவர்க்கு ஒரு சிறிதும் பயனில்லை. இவ் வறங்களாற் பெருகும் புண்ணியம் அவர்க்கில்லை; அப் பொருளில் ஞாயமான உரிமையாளர்க்கே யாம்.

பழியஞ்சிப் பாத்தூண்
உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பழி அஞ்சிப் பாத்து ஊண் வாழ்க்கை உடைத்தாயின்—பொருள் செய்யுங்கால் பாவத்தை யஞ்சி ஈட்டி, அப் பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், வழி எஞ்ஞான்றும் எஞ்சல் இல் – அவனதுகால் வழி, உலகத்து எஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தல் இல்லை.

பாத்து – பகுத்து; ஊண், முதனிலை திரிந்த தொழிற்பெயர்; வாழ்வானது உடைமை வாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது.

தொகுக்கும் பொருளில் தக்கார் பலர்க்கும் தொகுத்தளித்த பின் எஞ்சிய பொருளைத் தாம் துய்த்தல் நெறியென்று கூறியவாற்றால் அவர் வாழ்க்கை 'செலவு மிகுதி காரணமாக என்னாகும்?' என ஐயுறுவார்க்கு, அவர்தம் நிலை குறைதற்கு மாறாகப் பல்லாற்றானும் வளம் பொலிவெய்தி அவர்தம் கால்வழி சிறப்பாகப் பல்கும் என்று வற்புறுத்துவார், 'வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்' என்றார்.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**4-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(5-10-51 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| கிளை | நந்தன, ஆடி, | தளிர் |
|---|---|---|
| 4 | 8-8-52 வெள்ளி | 45 |


## கல்வி நிலை

சென்ற இருநூறு ஆண்டுகளாக நம் நாடு வேற்றவரான வெள்ளையர் ஆட்சியின்கீழ் இருந்தது. தமக்கென வாழாப் பெருமக்கள் பலரின் ஒத்துழைப்பினால் காந்தியடிகள் வெள்ளையர் ஆட்சியை நாட்டினின்றும் ஓட்டி உரிமையாட்சியை நமக்குத் தந்தருளினர். வெள்ளையர் ஆண்ட காலத்தில் நாட்டின் கல்வி நிலை அவர்களுடைய ஆட்சியின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமைக்கப் பெற்றிருந்தது. அலுவலகங்களில் பணியாற்றக் கூடிய நிலைமைக்குமேல் ஒரு சிறிதளவும் உயர்வதற்கு அக்காலக் கல்விநிலை உதவவில்லை.

வில்லியம் பெண்டிங் துரைமகனாரும், மெக்காலே துரைமகனாரும் அன்றமைத்த கல்வித் திட்டம் நாட்டில் நன்கு வேரூன்றி விட்டது. பல்கலைக் கழகங்கள், பழைய முறையைப் பின்பற்றியே ஒவ்வோராண்டிலும் பட்டதாரிகளை வெளியேற்றுகின்றது. பட்டதாரிகள் பெருகுவதற் கேற்ப வேலையில்லாத் தொல்லைகளும் பெருகுதலைக் காண்கிறோம்.

நாட்டுக் கல்வி நிலை, தற்காலச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று ஆங்காங்கும் பெருவாரியாகப் பேசப்படுதல் தவிர செயன்முறையில் அதைக் குறித்து ஏதும் செய்வாரில்லை. ஆட்சியினர் கொணரும் சில பல கல்வித் திட்டங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகவோ ஒன்றால் மற்றொன்று கேடுறுவதாகவோ அமைந்திருத்தலைக் காண்கிறோம்.

வெள்ளையர் அமைத்த கல்வித் திட்டம் நூறு ஆண்டுகட்கு மேலாகியும் அசைக்க முடியாத நிலையில் இருக்கும் போது, நம்மவர், இன்றமைக்கும் திட்டத்தை நாளைக்கு மாற்றியும், முடிவாகக்காணும் திட்டத்திற்குப் பின்னொருகால் திருத்தங்கள் கொணர்ந்தும் இவ்வாறாக இடர்ப்பட்டுக் காலங்கழிக்கின்றனர். திட்டங்களை நடைமுறைக்குக் கொணருமுன் நாட்டின் சூழ்நிலை, மக்களின் கருத்து, பொருளாதார நிலை இன்ன பலவற்றையும் நுனித் தாராய்ந்து முடிவாகக் கொணர்தல் நலம் பயப்பதாகும். இச் செயலுக்கு நல்லறிஞர் ஒத்துழைப்பும் அமைதியான ஆழ்ந்த ஆராய்ச்சியும் முதன்மையாகத் தேவை. 'துணிந்தபின் எண்ணுவம்' என்று, ஆராயாமல் தம் போக்கில் திட்டங்களை வகுப்பதும் நாட்டிற் புகுத்துவதும் மக்களுக்கு அவை தீமை தரும் போதும் மக்களிடையில் குழப்பங்கள் உண்டாகும் போதும் செய்வதறியாமல் தடுமாறுவதும் நலமன்று.

'இந்தி' போன்ற மொழித் தகராறுகள் ஒரு புறமிருக்க, இப்போதுள்ள முறையில் கல்லூரிப் படிப்புக்கும் கீழ்வகுப்புப் படிப்புகட்கும் தொடர்பு சிறிதும் காணவில்லை. செகண்டரி பாடசாலைக் கல்வித்திட்டம் குழந்தைகளுக்கு எவ்வித ஆக்கமும் தருவதைக் காணோம். ஐந்து வகுப்பு வரையில் ஆங்கிலம் போதிக்கப் பெறாமல் ஆறாவது (**I Form**) வகுப்பில் ஆங்கில எழுத்துக்கள் கற்கத் தொடங்கும் மாணவன் பள்ளியிறுதியில் தன் நண்பனுக்கோ, வேறு பிறருக்கோ ஆங்கிலத்தில் நான்கு வரிகளில் கடிதம் எழுதும் அளவுக்குக் கூட அறிவு பெறு திருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

தாய்மொழிக் கல்வியும், நன்கு கவனிக்கப் பெறவில்லை. இந்தி, வடமொழி போன்ற காட்டாறுகள் இடையே புகுந்து தாய்மொழியின் செவ்விய நெறிக்குப் பெரிதும் ஊறுபயக்கின்றன. தாய்மொழிக்கு முதன்மை தருவதனை, விஞ்ஞானம், சமூக அறிவு போன்ற நூல்களைத் தமிழில் சொல்லித்

தருவதால் மட்டும் காட்ட முடியாது. முதன்மையாகத் தமிழ் மொழியை, இலக்கண இலக்கிய மரபு கெடாமல் சிறு வகுப்புகளிலிருந்தே பயிற்றப் படல் நலமாகும். பழைய மரபினை ஒட்டி ஐந்தாம் வகுப்பிலிருந்தே 'நாவலர் இலக்கண வினாவிடை' போன்ற நூல்களில் பயிற்சி தர வேண்டும். எழுத்துப் பிழைகள் நேராவண்ணம் கட்டுரை எழுதும் பழக்கமும் சிறு வயதிலிருந்தே பிள்ளைகட்கு எளிதில் அமையும்படி செய்தல் வேண்டும்.

கல்லூரிகளில் மொழிக் கல்வி நீங்கலாக, மற்ற எல்லாப் பாடங்களும் ஒருங்கே மாணவர்க்குப் பயிற்றப் படுவதில்லை. மாணவர் தரத்திற் கேற்பப் பாடங்களும் பிரித்துத் தரப் படுகின்றன. படித்து வெளி வரும் மாணவர் ஒவ்வொரு பிரிவில் வல்லவராகி வெளி வருதல் காண்கிறோம்.

செகண்டரி பாடசாலைகளிலும் அம் முறை, நடை முறையிற் கொணர்தல் நலம் பயப்பதாகும். இம் முறையை ஒட்டியே தாம் செல்லும் கல்லூரிகளிலும் அம் மாணவர் கல்வி பயில வாயில் ஏற்படும். ஆங்கிலம், தாய் மொழி இவற்றை முதன்மையாகவும் விஞ்ஞானம் போன்ற நூல்களில் ஒன்று விருப்பப் பாடமாகவும் வைத்துக் கொண்டால் மாணவர் மொழிக்கல்வியோடு தமக்கு விருப்பமான பிறிதொரு கலையில் வல்லுநராகவும் வாய்ப்புண்டாகும். வேண்டுமானால், விஞ்ஞானம் சமூகம் கணிதம் ஆகிய பகுதிகளை முற்கூறிய சிறப்புக் கல்விக்கு ஊறு நேரா வகையில், எளிய சுருக்கமான முறையில், பொதுவாக உணர வேண்டிய அளவுக்கு மேற் போகாமல் அமைத்துப் பயிலச் செய்வதும் தவறில்லை.

தற்காலம் கல்வி நிலையங்களில் மாணவர்க்குத் தரும் கல்வி 'இழுக்கல் உடையுழி ஊற்றுக் கோல் போல' உதவும் நிலையில் இல்லை. பெரும்பாலும் ஏழைகள் நிரம்பிய நம் தமிழகத்தில் கல்லூரிப் படிப்புப் பெறுவோர் தொகை குறைவு. பள்ளியிறுதிவரை பயில்வோரே மிகுதி. பள்ளியிறுதியிற் பயின்று வெளி வருவோர் தமிழ் நன்றாகப் பேசவும் பிழையின்றி எழுதவும் உலகப் பொது மொழியான ஆங்கிலத்தின் சிறப்பினை ஓரளவேனும் அறியவும் தற்காலக் கல்வி உதவுமானால் மிகவும் நலமாகும். விரும்பும் மாணவர் பின்னும் இந்தி போன்ற மொழிகள் பயில்வதும் தவறில்லை.

பள்ளியிறுதியிலேயே மாணவர், தமிழில் சங்க இலக்கியமாண்பினையும், ஆங்கிலத்தில் அறிஞர் பெருமக்களின் எழுத்து நடை வளங்களையும் ஒரு சிறிதாவது சுவைத்து இன்புற வேண்டும் என்பது என் விருப்பமாகும். அறிஞர் இக் கருத்துக்களை அமைதியுடன் சிந்திப்பாராக.

—சி. து. க.

## குருகுல - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
   விலை அணா 6.
2. திருமூலர் அருள்மொழிகள்
   விலை அணா 4.
3. தணிகைமலை அல்லது அமைதி
   விலை அணா 6.
4. திருக்கழுக்குன்றப் பதிகம்
   விலை அணா 2.
5. கருக் கலை
   விலை அணா 4.
6. மூன்று உண்மைகள்
   விலை அணா 3.
7. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
   விலை அணா 9.
8. முல்லைப்பாட்டு அகராதி
   விலை அணா 8.
9. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
   விலை ரூ. 1.
10. ஆத்திசூடி - கருத்துரை
    விலை 0-0-3.

**கிடைக்கும் இடம்:**

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம், P. O., (S.I.R.)

# திருக்கழுக்குன்றச் சொற்பொழிவுகள்

(முன் தொடர்ச்சி)

திருவாசகம் திருவடியில் ஓதப்பெற்ற நூல். அதனிடத்தில் இருந்த காதலால் இந்நூல் வெளிவந்தது. இது ஆண்டவன் கருத்து என்று முன்னால் பேசியவர் சொன்னது உண்மைதான். ஆண்டு தோறும் வரும்போது இப் பதிகத்தைப் பொருள் தெரிந்து பாடவேண்டும். அடியேன் பெரும் ஆசை உடையவன் என்று கூறப்படுகின்றேன். அது உண்மையே. எல்லோரும், மாணிக்கவாசகர் கண்டதைப் போல ஞானத்தைக் காணும் வரை எனக்குத் திருப்தி உண்டாகாது. அடி என்றால் ஞானம். திருவடி என்பது தெய்வஞானம். ஞானத்தைப் பெறவே நாம் இங்கு வந்திருக்கின்றோம். இவ்விடத்துப் பந்தல் பெரிதாக இருக்க வேண்டும். திருக்கூட்டம் வளர்வதால் சைவம் நன்கு வளரும். நாடு சிறக்கும். இது யாவரும் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டிய விழாவாகும். செல்வர், தலைவர், அரசியலதிகாரிகள் சமயத்தலைவர்கள் முதலான எல்லாத் துறையினருள்ளும் உச்சமானவர்கள் இங்கு வர வேண்டும். மலையைச் சுற்றிலும் பர்லாங்குக்கு ஒரு சான்றோராவது இவ் விழா நாளில் இருக்கும்படி செய்ய வேண்டும். அனைவரும் திருவாசகத்தை ஓதி அமைதி பெற வேண்டும். நாளுக்கு நாள் நாம் உயரவேண்டும். இவ் வெளியீடு எங்கும் பரவிப் பயன் தருமாக. இங்கே திருமதி. வள்ளி அம்மையார் பொருட்செலவோடு பேருழைப்பெடுத்து உணவளிக்கும் தொண்டை மேற்கொண்டுள்ளது பெரிதும் போற்றத்தக்கது.

திரு. ஆடலரசு அவர்களின் உரை :—

இவ்விழா திருவருளின் துணையால் நடத்தப்படுகின்றது. திருவருளுக்கடுத்தபடி சான்றோர் துணையைப் பெற்றுள்ளது. செல்வர் உதவியும் கிடைக்குமானால் இதனால் தொலைவிலுள்ளோர்க்கும் பாமரர்க்கும் நன்மை செய்ய முடியும். மிகச் சிலர் முயற்சியாலேயே இவ் விழா நடந்து வருகின்றது. ஆசிரியர் அவர்கள் இதற்கு உயிர் போன்றவர். இதன் வளர்ச்சிக்கு அவர் பேய் போல உழைத்து வருகின்றார்.

அவர் நிகழ்த்திய விரிவுரையை நூலாக வெளியிட வேண்டுமென்று கேட்டபோது பற்றின்றித் தடையேதும் இன்றி இசைவு கொடுத்தார். தொண்டை நாட்டுத் திருப்பயணத்தை மேற்கொண்டிருந்த நாட்களிலும், வண்டிகளில் செல்லும் போதும், நிலையங்களில் இருந்த போதும் நேரம் கிடைத்தபோது மெல்காம் எழுதி இருந்ததைத் திருத்தி உதவினார். இது அச்சிடப்பட்டதும் வியப்பாகவே உள்ளது. திருக் கூட்டத்துச் செயலாளர்கள் சிறப்பாக திரு. மயிலை தெய்வ சிகாமணி அவர்கள் அப்பரடிகளைப் போற்றவர். தமக்குள்ள வயிற்று வலியையும் பொருட்படுத்தாமல் மிகச் சுருங்கிய காலத்தில் இவ்வளவு அழகாக இதனைப் பதிப்பித்திருக்கின்றனர் அவர்கள் உழைப்பு மிகப் பெரிது. அதற்குக் கூலியாகவேனும் ஆண்டவன் அவர் உடல் நலிவைப் போக்கியருள்வானாக!

இவ்விடத்தில் புதிய கருத்துக்கள் தோன்றுவதால் இது முதன்மையான இடம். திரு. வள்ளி அம்மையார், அருளுள்ளத்தால் அனைவர்க்கும் வேண்டிய உணவு வசதிகளைச் செய்திருக்கின்றார். அவர்கள் உழைப்பின் அருமையை எண்ணி ஒழுங்காய் நடந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்."

—: :—

முதல் நாள் திருமுறைப் பேரவைத் தலைவர் திருவள்ளுவரகம் திரு. ப. இராமநாத பிள்ளை அவர்களின் தலைமை உரை :—

"திருமுறையில் அன்புடையோர் கோவில்களில் திருமுறையை அன்றி வேறு எதும் ஓதுவதில்லை ஒன்று உறுதி கொள்ள வேண்டும். சடங்குகள் யாவும் அதைக் கொண்டே நடத்தப்பட வேண்டும். தீயிலிட்டபோதும் வேகாமல் வெற்றி பெற்ற தமிழ் வேதத்தை விட்டு மற்ற மந்திரங்களை நாம் கைக்கொளளக் கூடாது."

காஞ்சிபுரம் திரு. ஞானசம்பந்தர் உரை :

இன்றைய நிலையில் மாணிக்கவாசகர் திருநாளைக் கொண்டாட வந்துள்ள இக் கூட்டத்தைக் காணும்போது தமிழ் நாட்டின் அழுக்கு நீங்கிற்றென்று தோன்றுகிறது. தமிழ் நாடு சமயப்

பெரியார் பலரைப் பெற்றிருப்பதால் உயர்ந்த நாடாகும்.

திருமுறைப் பாடல்கள், இறைவன் எண்ணத்தால் தோன்றியவை. அவை ஏராளமாக உள்ளன. நம்பியாண்டார் நம்பிகள் வாயிலாக நமக்கு அவை கிடைத்துள்ளன. அப்பெரியார் பிள்ளையாரை வழிபட்டார். பொல்லாப் பிள்ளையார் என்பது சுயம்புமூர்த்தி. திருநாரையூர், திருவெண்ணெய் நல்லூர் என்னும் இரண்டிடங்களில் சுயம்பு மூர்த்திகள் உள்ளன. திருநாரையூர்ப் பிள்ளையாரால் திருமுறையும், திருவெண்ணெய் நல்லூர்ப் பிள்ளையாரால் சிவஞான போதமும் கிடைத்துள்ளன. அநபாய சோழன் நம்பிகள் துணைகொண்டு, தேவார திருவாசகங்களின் இருப்பிடத்தை அறிந்து, பல இன்னல்களையும் கடந்து அவற்றை வெளிப்படுத்தினன். தேவாரத்துள் பெரும்பகுதி செல்லரிக்கப்பட்டிருந்தமையைக் கண்டு மிக வருந்தினன். செல்லரித்தவை போக நமக்குக் கிடைத்தவை எண்ணாயிரம் சொச்சம் பாடல்களாகும். அநபாய சோழன் அப்பாக்களைச் செப்பேடுகளில் எழுதியும் வேறு வகைகளாலும் பரவச் செய்தான்.

அவை உள்ளத்தை மேன்மைப்படுத்தக் கூடியன. எப்படிப் பட்டவரையும் உணர்வுடையவராக்கக் கூடியன. அவையே நம்மைத் தூய்மைப்படுத்துவனவுமாகும். நாட்டில் இன்று கீழ்த்தரமான பாடல்கள் பல பாடப்படுகின்றன. பயன்படாப் பாடல்களில் இளைஞர் விருப்பம் கொள்கின்றனர். திருமுறைப் பாடல்கள் அரிய பல அதிசயங்களைச் செய்தவை. திருநீற்றுப் பதிகம் ஒன்று உண்டு. அதை ஓதித் திருநீறணிவதால் நோய் நீங்கும். கண்ணைப் பெறக் கூடிய பதிகமும் ஒன்று உண்டு. வாழ்க்கையில் சிக்கல் நேர்ந்த போது திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்து விளக்கம் பெறும் பழக்கம் நெடுங்காலமாக இருந்திருக்கிறது. பன்னிரு திருமுறையிலும் திருக்குறள் ஆட்சி காணப்படுகிறது. சமயத்தில் நாம் ஆழ்ந்த அன்புடையவராக இருக்க வேண்டும். திருநீறு, உருத்திராக்கம் அணிவதற்குக் கூச்சப்படக் கூடாது. சமயப் பெருமக்கள் நினைவு நாட்கள் எங்கும் கொண்டாடப்பட வேண்டும்.

குக ஸ்ரீ. பு. ப. இரத்தினசபாபதி நாயகர் அவர்கள் உரை:

ஒருவரை ஒருவர் அடக்க முயல்வதே பல துறை உலக வாழ்க்கையாய்க் காணப்படுகின்றது. சமயத்திலும் இதே நிலை நேர்ந்த போதுதான் உலகம் உய்யத் திருஞான சம்பந்தர் அழுது அந்நிலையை மாற்றும் ஆற்றலை இறைவனிடமிருந்து பெற்றார். அவர் அருளமுதம் பெற்று வகுத்த வழிகளைப் பிறர் பின்பற்றினர். இன்று உலகில் உள்ளதைப் பேசுகின்றனர். ஆனல் உணர்ந்து கூறுவதில்லை. தெய்வம் என்னும் ஒரு நிலைபெற்ற பொருள் உண்டு என்று நம்பும் நாம் அவ்வுண்மைப் பொருளை உணரவேண்டும்.

திருமுறைப் பாடல்கள் வெறும் பாக்களல்ல. அவற்றில் உயிர் உண்டு. நெருப்பில் இடப்பட்ட போது வேகவில்லை என்பதே உயிருண்டென்பதனைக் காட்டும். திருமுறையில் நம் உள்ளம் பதியப் பதிய உணர்வு மிகும்.

பெண்கள் தோடு போல இல்வாழ்க்கையில் ஒட்டி இருக்க வேண்டும். ஆண்கள் குழையைப் போல அசைந்து வேலை செய்தல் வேண்டும். மக்கள் வாழ்க்கைக்குப் பெண்களே பொறுப்புடையவர். தவருன கருத்துக்களைப் பரப்புவோரை இயற்கையே அழிக்கின்றது.

குளப்பாக்கம் சுவாமி அருணகிரி நாதர் அவர்கள் உரை:

'வள்ளுவர் காட்டிய தெள்ளிய உவமை' என்பது என் பேச்சின் தலைப்பு. திருவள்ளுவரைப் பெற்றதால் தமிழ் நாடு சிறப்புறுகின்றது. திருக்குறளை அனைவரும் கையாளுகின்றனர். கருத்துக்களை விளக்கவேண்டும் இடங்களிலும் வலியுறுத்த வேண்டிய இடங்களிலும் திருவள்ளுவர் உவமைகளைக் காட்டுகின்றார்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

பொறிகள் நல்லவற்றைச் செய்யாமற் போனால் பயனற்றவை ஆகின்றன. அதைப் போலவே இறைவனை வணங்காத தலையும் பயன் படாதென்று கூறுகின்றார். கண்கள் இறைவன் திருவுருவைக் காணவும் தேவார திருவாசகங்களைப் படிக்கவும் உள்ளன. பொறிகள் தம் வேலைகளைச் செய்யாமற் போனால் அவை இல்லாமையைப் போன்றனவே என்பதை உணர்ந்தே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இறைவனை வணங்குதலும், பாடுதலும், காண்டலும் மட்டும் போதா. அன்பு இல்லாத ஒருவர் வாழ்வது பாலை நிலத்தில் வற்றிய மரம் தளிர்த்ததைப் போலாகும் என்று உவமை கூறுகின்றனர். அன்பில்லையானால் இறைவனுக்கு நாம் எதைச்செயினும் பயன்படாது. அன்பு இருக்குமானால் அது சில நிகழ்ச்சிகளில் கண்ணீராக வெளிப்படும். அன்பால் வரும் கண்ணீர் கடைக்கண்ணில் வரும்.

பணம் பிறர்க்குப் பயன்படுவது பற்றி ஒரு உவமை கூறுகின்றார். "ஊருணி நீர் நிறைந் தற்றே யுலகவாம் பேரறிவாளன்திரு." குளத்து நீர் மக்களுக்குப் பயன் படுவதுபோல நற்செயல் களுக்காக அறிவுடையவர் செல்வம் பயன்படவேண்டும். இன்று சோறுபோடும் அம்மையாரின் செல்வமும் அவ்வாறே பயன்படுகின்றது.

பொருளைத் தீயவழிகளில் சேர்க்கக் கூடாது. தீய வழியில் ஈட்டி அறங்களைச் செய்தலை இறைவன் ஏற்கமாட்டார். நல்ல முறைகளிலேயே பொருளைச் சேர்த்து அறங்களையும் செய்ய முற்பட்டு அதனால் வறுமை வருமெனினும் அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்கின்றார்.

நல்ல கூட்டங்களில் ஈடுபட்டுத் தனிவாழ்க்கையில் தீமையுடையோராய் இருத்தல் தவறு. தவவேடத்திற்கு மக்கள் பெருமதிப்புக் கொடுப்பர். அவ்வேடத்திலிருந்து கொண்டு தவறுகளைச் செய்தல் புதலில் இருந்து கொண்டு புறவைக் கொல்லுதலைப் போலவும் புலித்தோலைப் போர்த்துக்கொண்ட பசு வயலை மேய்ந்ததைப் போலவும் ஆகுமென்று உவமைகளைக் காட்டி விளக்குகின்றார்.

புறத்தே குன்றிமணி செம்மையாய்க் காணப்படும். ஒரு புறம் அதில் கறுப்பு நிறமும் உண்டு. அதைப்போலவும் துறவிகளின் வேடத்தைப் பூண்டாலும் சிலர் அழுக்காறு என்னும் அழுக்குடையவராய் இருக்கலாம். இவை போன்ற உவமைகளைத் திருவள்ளுவர் கொடுத்திருக்கின்றார். மக்களாகிய நாம் மாக்களாக வாழக்கூடாது. வாழ்ந்தால் சான்றோரால் இழிக்கப்படுவோர். அன்பும் ஒழுக்கமும் உடையவராய் ஆண்டவனை அடையவேண்டும். நம்மைத் தூய்மையாக்கித் கொள்ள வேண்டும்.

தலைவர் முடிவுரை:

திருமுறை பன்னிரண்டு ஆனபிறகும் பதினொன்று சைவ மத்திரங்களுக்கு ஏற்ப அமைந்தது என்று கூறுவது பொருந்தாது. சிவஞான போதத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்களுக்கேற்ப அமைந்துள்ளன என்னலாம். இப் பன்னிரண்டு திருமுறையும் பன்னிரண்டு மாதங்களில் ஓதப்பட வேண்டும். வைகாசியில் தொடங்கி ஓராண்டில் படித்து முடிக்க வேண்டும். இவ்வாறு படிக்கும் பழக்கத்தை மேற் கொள்வதே நாம் செய்ய வேண்டுவது. தீக்கை முறைகளைத் திருமுறைப் பாடல்களைக் கொண்டு வகுத்து மேற்கொள்ளப் படவேண்டும்

———

நஞ்சன் கூடுபல்பொடி
பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர் தெரு, :: சென்னை-1

# நிலவுக்கு - - - - -

8

[துன்பநிலை]

அன்புத் தோழி!

படித்தேன். உன் கதறலைக் கண்டேன். உன் மனஉணர்ச்சியை உணர்ந்தேன். அழிவுப் பாதையில் — அறிந்தோ, அறியாமலோ — உங்கள் இல்வாழ்வு செல்ல ஆரம்பித்திருக்கிறது என்பதை யறிந்தேன்.

இதோ! உன் கடிதம் சொல்கிறதே! உன் மனஉணர்ச்சியை; உன் கடிதம் புகட்டுகின்றதே! உலகிற்கு நீதி.

"தோழீ! என் கொஞ்சு மொழி கணவனின் மனம், ஒரு வஞ்சியை நாடுகிறது. என்னில் என்ன குறைகண்டாரோ எனக்குத் தெரியவில்லை.

"குற்றம் என் கணவனுடையது மட்டுமன்று. அந்த வேல் விழி பாய்ச்சும் சேல் விழி மாது "வஞ்சி" யுடையதும் கூட என்று கூறுவேன்..........."

மணவாழ்க்கைக்குப் பிறகு எனக்கு ஒரு பாடம். இப்போது உனக்கது துன்பம்.

ஒரு பணமாகாத பெண் ஒரு மணமாகாத ஆணுடன் பழகுவதற்குக் காரணம் இருக்கலாம். பதவி நாடி ஒரு பெண் ஒரு ஆணுடன் பழகலாம். உதவி செய்யப் பட்ட காரணத்தினாலே ஒரு பெண் ஒரு ஆணுடன் பழகலாம், கடைக்காரர்களிடம் பெண்கள் பழகுவதற்குக் காரணம் இருக்கலாம். காரியாலயத்திலே, கலாசாலையிலே, பள்ளியிலே பெண்கள் ஆண்களுடன் பழகுவதற்குக் காரணம் இருக்கலாம்.

ஆனால், காரியாலயத்தில் வேலை செய்கின்ற அந்த ஒரே காரணத்துக்காக, ஒரு மணமான ஆணுடன், மணமாகாத கன்னிப் பெண், மாலை வேளைகளில் கடற்கரை யோரங்களிலும் களிப்பூட்டும் இடங்களுக்கும், இரவில் படக் காட்சிக் கொட்டகைக்கும் சென்று காலங்கழிப்பதை— நீ மட்டும் என்ன — நானும் தான் வெறுக்கிறேன்.

அவள், பிறர் தம்மைப் பார்த்து பரிகசிப்பரே என்பதை மறக்கிறாள். அடாத செய்கைகளைச் செய்கிறாய், முடிவில் படாத பாடும் துன்பமும் அடைவோம் என்பதை மறக்கிறாள்.

அன்புறப் பழகிய இரு உள்ளங்களிடையில் நாம் முட்டுக் கட்டையாய் அமைந்து, அவள் மனத்தைத் துன்பப்படுத்துகிறோமே என்பதை மறக்கிறாள். பெற்றோர் இருந்து அவர்கள் அவளை "இவ்வாறு செய்வது பாவம்" என்று புத்தி கூறினால் அவர்களை அவள் வெறுக்கிறாள்.

நேற்று இரவு "மணிமேகலை" யைப் பிரித்தேன். "ஆதிரை பிச்சையிட்ட காதை" வந்தது. காதுவன் என்பவன் ஒரு வணிகன். பெரும் பணக்காரன். அவன் மனைவி ஆதிரை என்பவள். கற்பிலே சிறந்தவள்.

ஆனால் அவன் ஒரு கணிகையை நாடினான். கட்டிய மனைவியை மறந்தான். கற்புக் கரசியைக் கைவிட்டான். எப்போதும் அக் கணிகையின் வீட்டிலேயே கிடந்தான்.

பணத்தை ஆற்றின் ஊற்றெனக் கணிகையிடம் கொடுத்து வந்தான் சாதுவன். ஆற்று நீர் வயலிற்பாய—அதனால் செழித்து வளரும் பசிய நாற்றுப் போல் அக் கணிகையும் அவனிடம் அன்பு செலுத்தினாள் கொஞ்சினாள். இன்பமுறப் பேசினாள். உடல் இரண்டு உயிர் ஒன்றுதான் என்று பசப்பு வார்த்தைகள் பேசினாள்.

ஊற்று வற்றியது. கையிலிருந்த பணம் பஞ்சாய்ப் பறந்து விட்டது. சாதுவன் கையிலிருந்த பணம் முழுவதும் ஆகிவிட்டது.

தண்ணீர் இல்லாத நாற்று உலர்ந்து விடும். பணம் அவனிடம் இல்லையென் றறிந்தவுடன் "பேணிய கணிகையும் பிறர் நலங் காட்டினாள். கரணம் இலி எனக் கைவிட்டாள். அவ்வரி:— "பேணிய கணிகையும் பிறர் நலங் காட்டி, காணம் இலியெனக் கையுதிர்க் கோடலும்" என்பது. முடிவில் சாதுவன் தன் தவறை உணர்ந்தான்.

தோழீ! உன் கணவன் கண்ணனும் ககாதவழிச் செல்வதை விட்டுத் தவறை உணர்ந்து, தன்னிலையறிந்து, மீண்டும் உன் மனம் நாடுவான் என எண்ணும்.

இளநகை.

---

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,

**COIMBATORE.**

# * புதிய உலகு *

(' கலங்கிள்ளி ')

புதுமை என்று கூறும்போது, பழமையை விரட்டுகிறோம் என்றோ புறக்கணிக்கிறோம் என்றோ வெறுக்கிறோம் என்றோ பொருளாகாது. உலகம் முன்னாள் இருந்த தன்மையிலே இன்றில்லை. இன்றிருக்கும் நிலையில் நாளை இருக்காது. மாறும். மாற்றம்தான் உலகத்தில் நாம் காணும் வியத்தகு ஆற்றல்.

நெருனல் உளன் ஒருவன்
இன்றில்லை எனும்
பெருமை உடைத்திவ் உலகு
—குறள் 336.

ஆம்; நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை. என்று கூறத்தகும் ஆற்றல், பெருமை வாய்ந்ததுதான் இந்த உலகம். இது மட்டுமல்ல; இவ்வுலகில் இந்தக் கணத்தில் இருந்த பொருள் மறுகணம் இருக்காது மாற்றம் அடையும். அல்லது மறைந்து வேறொன்றின் தோற்றத்திற்கு இடமளிக்கும். இந்நிலைதான், இதையே கொள்கையாகக் (மதமாகக்) கொண்டுள்ள ஒருசாரார், க்ஷணபங்கவாதிகள் என்ற பெயரும் பெற்றுள்ளனர்.

புதியது என்று கூறும் எந்த ஒன்றும் பழமையிலிருந்து முகிழ்ப்பதுவேயன்றி இல்லாத ஒன்றல்ல என்பது சிந்திக்கின் விளக்கமுறும்.

பழையன கழிதலும் புதியன
புகுதலும்
வழுவல கால வகையினானே
—நன்னூல்.

எனவே, கால வேறுபாட்டினால், பழையன கழியும்; புதியன பழையனவற்றிலிருந்து தோன்றும். இது இயற்கை முறை. நம் வாழ்க்கை, உடை, வீடு, கல்வி, உணவு, பேச்சு, முதலிய யாவற்றோடும் பழமை இல்லை; புதுமை மிளிர்கின்றது. ஆனால் இந்தப் புதுமையின் அடிப்படை எதுவென்று நோக்கினால் அது பழமை என்பது தெள்ளிதின் விளங்கும்.

இந்தப் பழைய முறையில் இருந்து சிறிது சிறிதாக மாற்றம் எய்தி, காலத்திற்கும், சூழ்நிலைக்கும், தட்ப வெப்பநிலைக்கும், மக்கள் அறிவு வளர்ச்சிக்கும் மன்பதையின் பொது நலனுக்கும் தக்கவாறு வளர்ச்சியடைந்து வருவதை முன்னேற்றம் என்றும் சீர்திருத்தம் என்றும் குறிப்பிடுகிறோம். இத்தகைய வளர்ச்சியைப் புறக்கணிக்கும் சமூகம், உலகத்தோடு ஒட்ட ஒழுகாததாய்த் தன் நாட்டு மக்கட்குத் தீங்கையே விளைவிப்பதாகின்றது. நிற்க.

புதிய உலகு என்று நாம் குறிப்பிடும்போது, இந்த உலகு பயனில்லை என்றும் புதிய உலகில்தான் பயன் உண்டு என்றும் கூறுவதாக ஆகிறது. இல்லை. இந்த உலகை நாம் முற்றும் புறக்கணிக்கவில்லை. இந்த உகத்து நாடுகள் பல தம்முள் மாறுபட்டுப் போர் செய்கின்றன. படைபலத்தாலும் பணபலத்தாலும் பல நாடுகளைத் தம் கீழ்ப்படுத்தித் தங்கள் சுய கௌரவத்தை, லாபத்தை ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட, பஞ்சைகளை, பாட்டாளிகளை, ஏழைகளை, விலைக்கு வாங்கிப் பலி கொடுக்கின்றன ஒவ்வொரு நாட்டிலும் பணக்காரன் செல்வாக்குள்ளவன் அரசை அண்டி வாழ்பவன் நன்றாக வாழ, உழைப்பவன் உழுபவன் தாழ, பிச்சைக்காரனும் சமுதாயப் புழுக்களான கணிகையரும் திருடரும் எத்தரும் கொலைகாரரும் மன்பதையின் மாற்ற முடியாத களங்கமென நாட்டில் நடமாட, அந்த நாடுகள் இயங்குகின்றன. தங்களைப் பற்றித் தப்பட்டம் அடிக்கும் போது மட்டும் ஒவ்வொரு நாடும், தன் வளம், தன் நாட்டின் பழங்காலத் தற்காலப் பெருமை, மாடமாளிகையின் உயர்ச்சி, கடற்படை, தரைப்படை முதலியவற்றின் கவினுறு வனப்பு, துறைமுக அமைப்பு, செல்வந்தர்கள் செல்வாக்குள்ளவர்களின் உடை விசேஷம், அவர்கள் பேசிய பேச்சுகள் முதலிய யாவற்றையும் வெளியிடத் தயங்குவதில்லை. ஆனால் நாடு குறிப்பிடும்போது அந்த நாட்டின் லட்சணம் என்ன? எப்படி இருக்கவேண்டும் ஒரு நாடு? எவை எவை இல்லாவிட்டால் ஒரு நாட்டைப் பூரணமான நாடு என்று கூறமுடியாது இவைகளுக்கு விடை கண்டாக வேண்டும்.

(தொடரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; தி.சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)